[1972 ஆகஸ்ட் 18

இணைப்பு III

[143-ம் பக்கத்திலுள்ள 63-ம் எண்ணுள்ள வினாவின் விடையைக் காண்க]

திருவாளர்கள் ஸ்பால், தாமஸ் ஆகியோர் அடங்கிய உலக வங்கி மேற்பார்வைக் குழு ஒன்று 1971 செப்டம்பரில் சென்னைக்கு வந்து, அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தினால் நிதி உதவி செய்யப் படும். தமிழ் நாட்டிற்கான வேளாண்மைத் கடன் உதவித் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக மாநில அரசுடனும், கூட்டுறவுத்துறை அமைச்சருடனும் ஆலோசனை நடத்தியது. தமிழ்நாடு வேளாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உகந்தது என்று அறிவிப்பதற்கான நிபந்தனைகள் பற்றி ஆலோசிப்பதே இக் குழுவின் நோக்கமாகும்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்கு கடனுதவி செய்வதில் தற்போது கடைபிடிக்கப்படும் நடைமுறைகளில் கொண்டு வரப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் வருமாறு :—

(அ) தொடக்கநிலை வங்கிகள் மற்றும் இத்திட்டத்தில் பங்கு பெறும் ஏனைய வங்கிகள் ஆகியவற்றிலிருந்து பயன்பெறு வோருக்கு ஆண்டு ஒன்றுக்கு 9 சதவீதத்திற்கும் குறையாமல் வட்டி விதிக்கப்பட வேண்டும்.

(ஆ) தனிப்பட்ட திட்டத்திற்கு ஆகும் செலவில் ½ சத வீதம் முடிவான மதிப்பீட்டுக் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும்.

(இ) கீழ்க்கண்ட வீதங்களில் ரொக்கம் வசூலிக்கப்பட வேண்டும்.

(1) நில வடிகால் மண்வளப் பாதுகாப்பு—மேம்பாட்டுச் செலவில் 10 சதவீதம்.

(2) சிறு பாசனம் (சிறு உழவர்கள் தவிர ஏனையோர்)—மேம்பாட்டுச் செலவில் 20 சதவீதம்.

(3) ரூ. 10,000-க்கு குறைவாக மூலதனச் செலவு ஏற்படுகின்ற இடங்களில் சிறு உழவர்களுக்கு சிறு பாசனம்—மேம் பாட்டுச் செலவில் 10 சதவீதம்.

(4) டிராக்டர்—மேம்பாட்டுச் செலவில் 25 சதவீதம்.

(5) டிராக்டர் கருவிகள்—மேம்பாட்டுச் செலவில் 20 சத வீதம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 18]

(6) நிலச் சமன்பாடு—மேம்பாட்டுச் செலவில் 20 சதவீதம்.

சிறு உழவர்களைப் பொறுத்த வரையில் சிறுபாசனத் செலவில் 10 சதவீதம் (ரூ. 10,000-க்கு மேற்படாத இனங்களுக்கு) மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்சொன்ன ரொக்கத்தொகை விதங்களில்,– கடன்பெற்றவர். தொடக்க நிலவள வங்கிக்குச் செலுத்த வேண்டிய கட்டாயப் பங்கு மூலதனத் தொகையும் அடங்கும் என்று அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழக ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளது. பங்கு மூலதனத் தொகையும் ரொக்கத் தொகையும் சேர்ந்து திட்டச் செலவில் 10 முதல் 25 சதவீதம் வரை இருக்கும்.

தொடக்க நிலவள வங்கியின் பங்கு மூலதனத்திற்குச் செலுத்தப்படும் தொகையைத் தவிர, வடிகால், மண்வளப் பாதுகாப்பு, நிலத்தைப் பண்படுத்துதல், கிணறுகள் வெட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்கள் அமைத்தல், முதலியவற்றிற்கான கடன்களுக்கு அளிக்கப்படும் ரொக்கத் தொகை. சொந்த உழைப்பும் தனது குடும்பத்தினரது உழைப்பு வடிவத்தில் இருக்கும். ஆனால், டிராக்டர், டிராக்டர் கருவிகள், பம்புசெட்டுகள், ஆயில் எஞ்சின்கள் முதலியவை வாங்குவதற்காக அளிக்கப்படும் கடன்களைப் பொறுத்த வரையில், அவற்றிற்கான ரொக்கத் தொகை தொடக்க நிலவள வங்கிகள் மூலமாக இயந்திரங்கள் வழங்கியவர்களுக்கு ரொக்கமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்ட ஒப்பந்தம் பின் வருமாறு விதிக்கிறது. அதாவது அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகம் வேறு வகையால் ஏற்றுக் கொண்டால் தவிர, மற்றப்படி நிலவள வங்கிகளும் தொடக்க வங்கிகளும் தங்களுடைய இதே போன்ற கடன் வழங்கு பணிகள் அனைத்திற்கும் இதே மதிப்பீட்டுக் கட்டணம், துணைப்பிணையம், ரொக்கத் தொகை செலுத்துதல், கடன் கெடு முடிவடைவதற்குரிய தேவைகள் ஆகியவை பொருந்தச் செய்யும்; இதுபோல அந்த வங்கிகள் தமது கடன் வழங்கு பணிகள் அனைத்திற்கும் அதே வட்டி விதங்களைப் பொருந்தச் செய்யும்.

திட்ட ஒப்பந்தம், விசையேற்றங்களின் அளவு, இவ்வளவு தொலைவிற்கு ஒரு கிணறு இருக்க வேண்டுமென்பது போன்ற சில தொழில்நுட்பத் தேவைகளை வரையறுக்கிறது. மேலும்,

அறிவியல் வழியில் கூட்டுறவு முறையில் நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து நீரைப் பொருத்தமாகவும் சிக்கனமாகவும் கையாண்டு பயன்படுத்தக் கருதப்பட்டுள்ள சிறுபாசன முதலீடுகள் எல்லா வற்றின் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய மதிப்பீட்டு நடை முறைகளையும் திட்ட ஒப்பந்தம் விதிக்கிறது.

இணைப்பு IV

[149-ம் பக்கத்திலுள்ள 69-ம் எண்ணுள்ள கேள்வியின் விடையைக் காண்க]

தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும்.	நிலுவைத் தொகை (ரூபாயில்)
1. மத்தியப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி மாணவர் விடுதி	29.00
2. தொழில் நுட்ப இந்திய நிறுவனம்	343.14
3. சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதி	2,128.00
4. வெலிங்டன் சீமாட்டி அடிப்படைப்பள்ளி மாணவிகள் விடுதி	907.17
5. பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி	1,253.00
6. மாநிலக் கல்லூரி மாணவர் விடுதி	884.80
7. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர் (ஆடவர் விடுதி)	39.68
8. ஒழுக்கக்கண்காணிப்பு இல்லம்—ஸ்திரீ சதனம்	3,186.66
9. அரசினர் சீர்திருத்தப்பள்ளி (பெண்கள்)	4,233.76
10. மாவட்ட நல அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 10 கல்வி நிறுவனங்கள்	6,938.40
11. திரு. இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி	11.20
12. திரு. வெங்கடேஸ்வரா மாணவர் விடுதி	655.20
13. விக்டோரியா மாணவர் விடுதி	1,640.80
14. விவேகானந்தர் கல்லூரி மாணவர் விடுதி	90.98
15. புனித தாமஸ் கான்வென்ட்	1,533.28
16. புதுக் கல்லூரி மாணவர் விடுதி	940.80
மொத்தம்	24,815.88